**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW5**

Deposition of the witness of **LW5**

| Name | திரு.ராகுல் | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Father Name | திரு.ரவி | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | விளாபாக்கம் | Age | 26 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 8405 9502 1458 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் விளாப்பாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சிப்காட், லாலாபேட்டையிலுள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கில் காயம்பட்ட அஜித் குமார், சுதாகர், அண்ணாமலை ஆகியோரை எனக்கு தெரியும். அவர்கள் என் ஊரை சேர்ந்தவர்கள். 24.10.2022 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் நான் எங்கள் ஊரிலுள்ள பெருமாள் கோவிலில் என் நண்பர்கள் அஜித், சுதாகர், ஜெய் கணேஷ் ஆகியோருடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் யுவராஜ், தீனா, தானு, கோகுல் ஆகியோர் அங்கு வந்து எங்களை பார்த்து கிருஷ்ண ஜெயந்தி விழா கணக்கை எங்களிடம் கேட்டு அசிங்கமாக பேசினார்கள். நாங்கள் அங்கிருந்து எழுந்து சென்ற போது யுவராஜ் எங்களை பார்த்து நில்லுங்கடா என்று சொல்லிவிட்டு எங்களிடம் வந்து கத்தியால் அஜித்தின் கழுத்தில் பின் பகுதியில் கீறிவிட்டார். அஜித்தின் இடது மார்பிலும், வயிற்றிலும், இரண்டு கால்களிலும் அதே கத்தியால் யுவராஜ் கீறிவிட்டார். சுதாகர் என்பவருக்கு தொடையில் கத்தியால் யுவராஜ் கீறினார். அண்ணாமலை என்பவர் அங்கு வந்து தடுத்த போது அவரது நடு விரலில் யுவராஜ் கத்தியால் குத்தியதில் காயம் ஏற்பட்டது. பின்னர் நாங்கள் அஜித்தை ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். காயம்பட்ட சுதாகரை இராணிப்பேட்டை எஸ்.எம்.எச்

மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.